


# லேஸ் மீது தைப்பது எப்படி

இந்த வீடியோவில் நீங்கள் ஒரு டேபிள் நேப்கின்னை எப்படி லேஸ் வைத்து அழகுபடுத்துவது என்று பார்ப்போம்.



இதற்கு ஒரு நேப்கின், லேஸ், மற்றும் கொஞ்சம் குண்டூசிகள் தேவை.

துணியின் மேல்பக்கம் மேல்நோக்கி இருப்பது போன்று வைத்துக் கொள்ளவும். லேஸ்சை துணியின் மூலையிலிருந்து ஒரு இன்ச் கீழ் நோக்கி அதன் கை பாகத்தில் வைத்து பின்களால் பொருத்திக் கொள்ளவும்.

தொடர்ந்து லேஸ்சை நேராக பின் செய்துகொண்டே வரவும். துணியின் மூலை வந்து திரும்பும் பொழுது, ஒரு சிறிய சுருக்கம் வைத்து திருப்பவும். இங்கும் பின் செய்து கொள்ளவும்.

தொடர்ந்து லேஸ்சை அனைத்து ஓரங்களிலும் வைத்து பின் செய்துகொள்ளவும்.
சீரான இடைவேளையில் பின் செய்வதால் தைக்கும் பொழுது மிகவும் உதவியாக இருக்கும்.

எந்த இடத்தில் தொடங்கினீர்களோ அந்த இடம் வந்ததும் மீதமுள்ள லேஸ்சை அரை இன்ச் விட்டு லேஸ்சை கத்தரித்துக் கொள்ளவும்.

அரை இன்ச் அளவு லேஸ்சை உள்ளே மடித்து ஆரம்பித்த இடத்தின் மீது வைத்து பின் செய்து கொள்ளவும். இப்படி செய்வதால் மடித்த இடத்தில் துணி நகராமல் இருக்கும்.

இப்போது பின் செய்துள்ள நாப்கின்னை மிஷினிற்கு கொண்டு செல்லவும்.

துணியை சரியான ஊசிக்கு நேர் கீழ் வைத்து பிரஷர் புட் ஐ இறக்கிக் கொள்ளவும். மிஷினில் தையலுக்கான பேட்டர்னை டீ மற்றும் ஊ யின் இடையில் வைத்து தையலின் நீளத்தை 2 மற்றும் 3 க்கு நடுவில் வைத்துக் கொள்ள வேண்டும்.



தைப்பதற்கு ஆரம்பிக்கும் முன் முதல் பின்னை நீக்கிவிடவும். இவ்வாறு நீக்கி விடுவதால் ஊசி உடையாமல் இருக்கும். இதே போல் தைத்துக் கொண்டே ஊசியின் அருகே வரும் போது பின்களை எடுத்து விடுங்கள்.

லேஸ்சின் மூலைகளை நெருங்கும் பொழுது பேலன்ஸ் வீலை திருப்பி
ஊசியை துணியின் கீழ் இறக்கவும். பிறகு பிரஷர் புட் ஐ உயர்த்தி துணியை திருப்பிக் கொண்டு கீழ் இறக்கவும்.

தொடர்ந்து நாலு பக்கமும் தைத்து முடிக்கவும். தைத்து முடித்த உடன் பிரஷர் புட் ஐ உயர்த்தி துணியை எடுத்து மீதமுள்ள நூலை வெட்டி விடவும்.

இப்போது உங்களுடைய அழகான நாப்கின் ரெடி.






லேஸ் தைப்பதற்கு ஸிக்ஸாக் தையலையும் பயன்படுத்தலாம். ஆனால் தைப்பதற்கு முன் எது நன்றாக இருக்கிறது என்று பார்த்து உங்களுக்கு விருப்பமான தையலை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். இது போன்று உங்கள் வீட்டையும் குடும்பத்தினரின் உடைகளையும் அழகுபடுத்தி உற்சாகம் அடையுங்கள்.

